(எ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நூல்கள் உற்பத்தியாகும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு ஆலேயில் மூலதன அடக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

	(ரூ. லட்சத்தில்)
நிலம்	1.44
கட்டிடங்கள்	13.30
யந்திரங்கள் கதிர்கள் அடக்க விலே உட்பட	44.85
பலவகை உடைமைகள்	2.44
மொத்தம்	62.03

(இ) 31—1—1966 வரை பங்கு மூலதனமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 20.21 லட்சம்.

(உ) அரசாங்கம் கடனுக தங்களது நிதியிலிருந்து ஒன்றும் கொடுக்கவில்லே.

(எ) 12,312 கதிர்கள் முழுவதும் மூன்று வேளேகளிலும் இயங்கினல் ஆண்டொன்றுக்கு ரூ. 57 லட்சம் பெறுமானமுள்ள 4,280 கட்டுகள் (bales) கொண்ட பருத்தி நூல் உற்பத்தியாகும்.

விவசாயத்திற்கு இலவச மின்சாரம்

*** 506 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்காமல் வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனேயில் உள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

திரு. செ. மாதவன் : சமீபத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் இப்படி விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் சப்சிடி கொடுக்க மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலே நம்முடைய ராஜ்யம் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யூனிட்டுக்குப் 12 பைசாவுக்கு அதிகமாக சார்ஜ் செய்யக்கூடிய இடங்களில் விவசாயிகளுக்கு அந்தக் கட்டணத்தைக் குறைக்கும் வகையில் மத்திய சர்க்கார் சப்சிடி கொடுக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 8¼ பைசாதான் சார்ஜ் செய்யப்படுகிறது. ஆகவே, அந்த விதி நமக்குப் பொருந்தாது.

30th March 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்காவிட்டாலும், விவசாயத்திற்கு செல வாகிற மின்சாரக் கட்டணத்தில் பாதியையாவது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதிக்குக் கொஞ்சம் குறைவாக இப்போதே சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. யூனிட் ஒன்றுக்கு எல்.டி. ரேட் செலவாவது 14 பைசா விவசாயி களுக்கு சார்ஜ் செய்வது 8¼ பைசா. இப்போதே பெரிய அளவு சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Copper ore in Kottaipatti area

* 507 Q.—SRI V. SANKARAN :
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether it is a fact that deposit of copper ore has been discovered in the Kottaipatti Forest area near Harur taluk in Dharmapuri district ; and

(b) the detailed result and report of the survey made thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) and (b) Evidences of copper mineralisation were noticed by the State Geological Branch in the course of survey for minerals over an area of 250 square miles around Bairanaickenpatti and Kottaipatti in Harur taluk of Dharmapuri district during the latter part of the year 1965. The occurrence was first observed near Bairanaickenpatti at the road junction about 20 miles east of Harur. In view of the favourable geological structures and evidences of mineralisation of the area, it is proposed to recommend the area to the Geological Survey of India for necessary geophysical investigation to know more on the ore minerals.

திரு. வை. சங்கரன் : தோராயமாக எவ்வளவு கிடைக்கு மென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மதிப்பிடப்படவில்லை.

திரு. ம. கமலநாதன் : தர்மபுரி மாவட்டத்தில் தாமிரம் மட்டு மல்ல ; சுண்ணாம்புக்கல், தங்கப்படிவம் எல்லாம் கிடைக்கும் என்ற அளவுக்குச் சொல்லப்படுகிறது. ஆகவே, ஸ்பெஷல் ஜியலாஜிகல் சர்வே நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிரிலிமினரி ஜியலாஜிகல் சர்வே ஏரியா பூராவும் சென்னை ராஜ்ய சர்க்கார் செய்து கொண் டிருக்கிறது. அதன் பயனாக இந்த விதமான மினரிலிசேஷன் இருக்கலாம் என்று கண்டு பிடித்திருக்கிறோம். இப்போதும் அந்தப் பகுதியில் ஸ்டேட் ஜியலாஜிகல் சர்வே நடந்து கொண்டு தான் இருக்கிறது.